செய்தி வெளியீடு எண்: 427 நாள் : 07.08.2013

**மாற்றுத் திறனாளிகளுக்கு ஒருமாத இலவச மல்டிமீடியா பயிற்சி அறிவிப்பு**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மூலம், கை, கால் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் குறையுடைய மாற்றுத் திறனாளிகள் 100 நபர்களுக்கு ஒரு மாத பல்லூாடக பயிற்சி **(Multimedia Training)** மற்றும் 100 நபர்களுக்கு இலக்க புகைப்பட பயிற்சி **(Digital Photography Training)** தேசிய திரைப்பட வளர்ச்சி கழகம், சென்னையில் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.21. 00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்கள். இப்பயிற்சிக்கான தகுதிகளாக, மாற்றுத் திறனாளிகள் 8 ஆம் வகுப்பு தேர்ச்சியும், 16 முதல் 40 வயது வரம்புக்குள் இருக்க வேண்டும். விடுதி வசதி தேவைப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கு விடுதி வசதியும் மற்றும் பயிற்சி உதவித் தொகையாக ரூ.1,000/– வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சிக்கு விருப்பமுள்ள மாற்றுத் திறனாளிகள், விண்ணப்பத்துடன் கல்வி தகுதி சான்று நகல், மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை நகல் ஆகியவற்றுடன், பெயர் மற்றும் முகவரி, வயது, கல்வித் தகுதி, மாற்றுத் திறன் தன்மை மற்றும் சதவீதம், விடுதி வசதி தேவையா என்ற விவரம், தொலைபேசி எண் ஆகிய விவரங்களுடன் அந்தந்த மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்களுக்கு நேரிலோ/ தபால் மூலமாக 16.8.2013க்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9